★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55000

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 20உ வியாழன் (2—2—56) ★ ★ வெளியூர்: தை 21உ வெள்ளி (3—2—56) [இதழ் 198

கன்னித் தமிழும், கன்னடமும்!

பெங்களூர், ஜன. 28—

"ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய பழம்பெரும் மொழியாகும் தமிழ். அத்தகு தொன்மை மொழியின் உயர்வை உணர்ந்துகொள்ளும் ஆர்வம் அனைவருக்கும் இருக்கிறது. ஒருகாலத்தில், தென்னாட்டில் நடைமுறையிலிருந்த ஒரே மொழி தமிழாகும். கன்னட மொழியுங்கூட, தமிழ் மொழியிடமிருந்து கடன் வாங்கி பிற்காலத்தில்தான் உருவெடுத்தது. கன்னட—தமிழ் மொழிகளுக்கிடை இருந்துவரும் மொழி அமைப்பு, ஒப்புவமை கருத்தைத் தாண்டும் சிறப்புடையனவாக இருக்கின்றன."

—எஸ். சென்னையா, மைசூர் பிரதேச காங்கிரஸ் குழுத் தலைவர்.

பிப். 20: பொது வேலை நிறுத்தம்:

'காமராசர் அல்ல நாடு என்பதை உணர்த்த வேண்டும்'

'நாடு நொந்தளிக்கிறது--இவர் நாட்டியக் கலை வளர்க்கிறார்'

'மற்ற மாநில மந்திரிகள் கணக்குப் போடுகின்றனர்- இவர் களிநடனம் காண்கிறார்'

'கொடி எதுவானாலும் குடி தமிழானால் கூட்டணியில் ஒன்றுபடுவீர்'

'பழைய பகை மறப்போம்! படையில் சேருவோம்! பகை முடிப்போம்'

சென்னை பொதுக்கூட்டத்தில் அண்ணா முழக்கம்

"மைசூர் முதன் மந்திரி 'மைசூருடன் இணைகிற கர்னாடகம் மட்டும் போதுமா? சென்னையும் வந்தால் நான் இன்னும் எவ்வளவு எழிலுள்ள ஆட்சியில் அமரமுடியும்?'—என்று எண்ணிப் பலருடன் கலந்து பேசிக்கொண்டிருக்கிறார்; திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன், தமக்குக் கிடைத்த தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் மட்டுமின்றி, தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட செங்கோட்டையின் பகுதி ஆகியவற்றைக் கணக்கெடுத்துக்கொண்டிருக்கிறார்—அந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய யானைகள் எவ்வளவு? வேங்கைகள் எவ்வளவு? தோட்டங்களில் கிடைக்கக்கூடிய தேயிலை எவ்வளவு? ரப்பர் எவ்வளவு? ஏலம், கிராம்பு எவ்வளவு?—என்று, புள்ளி விவரம் சேகரித்துக்கொண்டிருக்கிறார்.

"ஆனால், நமக்கும் ஒரு முதன் மந்திரி இருக்கிறார்; அவர் என்ன செய்கிறார்? இரண்டு நாளைக்குமுன், ஒரு சிறுமியின் நாட்டியத்திற்குத் தலைமை வகித்து நடத்தி வைத்திருக்கிறார்.

"நாடு நொந்தளிக்கிற இந்த நேரத்தில் அந்தந்த மாநில மந்திரிகள் தங்கள் கோரிக்கைகளுக்குச் சாதகமான ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டிருக்கிறார்கள்; புள்ளி விவரங்களைச் சேகரித்துக்கொண்டு வாதாடுகிறார்கள்; நேருவின் முகத்தில் இராஜினமாக் கடிதங்களை விசி எறிந்துகொண்டிருக்கிறார்கள்; ஆனால், தேவிகுளம்—பீர்மேடு முதலிய தமிழ் வட்டங்கள் தமிழகத்திற்கு இல்லை என்பது தெரிந்தும், நாட்டியத்திற்குத் தலைமை வகித்து நடத்திக்கொண்டிருக்கிறார், இந்த மாநில முதன் மந்திரி!

"கடை காட்டி, இடை காட்டி, பூங்கொடி போல் துவண்டு, நெளிந்து நடனமாடும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு காமராசர் கலையை வளர்ப்பதில் நமக்குக் கவலை இல்லை; முடிந்தால், மந்திரிகளும்கூட நாட்டியமாடட்டும்; அது பற்றியும் கவலை இல்லை; ஆனால், இதைப் பார்க்கிற நேரு என்ன நினைப்பார்? 'தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு இல்லை என்றோம்; செங்கோட்டையின்பகுதியையும் பறித்து கேரளத்திற்குத்தந்தோம்; அது பற்றி அந்த மக்களுக்குக் கவலை இல்லை; நாட்டில் கொந்தளிப்பு இல்லை; கிளர்ச்சி இல்லை; இதோ பாருங்கள்—அந்த மாநில மக்களுக்கென்றிருக்கிற முதன் மந்திரி கலையை வளர்த்துக்கொண்டிருக்கிறார்,'—என்று கருதமாட்டாரா? எண்ணமாட்டாரா?

"'தேவிகுளம், பீர்மேடு இல்லை என்று சொன்னோம்; இந்த மாநில மக்கள் எதுவும் கூறவில்லை; எனவே, கோவையை கர்நாடகத்திற்குக் கொடுக்கலாம்; சென்னையை ஆந்திரருக்குக் கொடுக்கலாம்; தமிழ் நாட்டைத் துண்டுபோட்டு, எதை எவருக்கு வேண்டுமானாலும் தரலாம்; எவரும் சிறு விரலை அசைக்கமாட்டார்கள்'—என்றும் எண்ணமாட்டாரா பண்டித நேரு?

"ஆகவேதான், தமிழருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை நாம் எதிர்த்துப் போராடவேண்டும் என்கிறோம். காமராசர் அல்ல நாடு என்பதைக் காட்டவேண்டும் என்று விரும்புகிறோம்.

"காமராசர் அல்ல நாடு—நிச்சயமாக! காமராசர் அல்ல நாட்டிற்குப் பொறுப்பாளி! காமராசர் கோபுரக் கலசம்—கோபுரமல்ல! காமராசர் முதல் மந்திரி—நாட்டு மக்கள் அல்ல.

"மக்கள் எவர் பக்கம் திரண்டு நிற்கிறார்கள்? தி. மு. கழகத்தின் பக்கத்தில் பெரியதோர் அணிவகுப்பு நிற்கிறது; தமிழரசுக் கழகத்தினருகே ஒரு பெரும் அணிவகுப்பிருக்கிறது; கம்யூனிஸ்டுகளின் பக்கத்தில் மற்றோர் அணிவகுப்பு உள்ளது; சோஷலிஸ்டுகள், பிரஜா—சோஷலிஸ்டுகள் பக்கத்திலும் மக்கள் அணிவகுப்பு உண்டு; இப்படி நாட்டின் மிகப் பெரும் பகுதி காமராசர் பக்கமோ, காங்கிரசின் பக்கமோ இருக்கவில்லை.

"காமராசர் பக்கம் என்றால்—ஏழெட்டு மந்திரிகள் இருக்கிறார்கள்; சுமார் நூறு சட்டசபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; காங்கிரஸ் கமிஷன் ஏஜெண்டுகள் சிலர் இருக்கிறார்கள்; எல்லாமாகச் சேர்த்தால் தமிழ் நாட்டில் 10 ஆயிரம் பேர் தேறினால் அது மிக தாராளமான கணக்கு! எனவேதான், தமிழருக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை எதிர்த்துப் போரிட எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள். நாட்டு மக்கள் அவர்கள் பக்கம் திரண்டிருக்கிறார்கள் என்பதை பிப்ரவரி 20-ந் தேதியன்று ஆட்சியாளர்கள் உணரவேண்டும்."

—என்று, அண்ணா அவர்கள், 31—1—56 அன்று சென்னை—வண்ணையம்பதி கல்லறை மைதானத்தில், 4-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசினார்:—

"கடந்த சில நாட்களாக, நாட்டு மக்களுடைய உள்ளத்தை வாட்டி வதைக்கும் இரண்டு மூன்று பெரிய பிரச்னைகளைக் குறித்து, தி. மு. கழகத்தின் கொள்கையை விளக்கிக் கூறுவதற்காகவும், தி. மு. கழகம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளில் பங்குகொள்ள உங்களை அழைப்பதற்காகவும் சென்னை மாவட்டக் கழகத்தார் ஏற்பாடு செய்திற கூட்டங்களில் இது இரண்டாவதாகும்; நேற்று, நமது தி. மு. கழகப் பொதுச்செயலாளர் சென்னை கடற்கரையில், தி. மு. கழகப் பொதுக் குழுவின் முடிவுகளை விளக்கிப் பேசினார்; இன்று நானும், நாளை முதல் வேறு பல நண்பர்களும் பல்வேறு இடங்களில் தொடர்ந்து பேசவிருக்கிறோம்.

"இந்தக் கூட்டங்களில் எல்லாம் நீங்கள் பெருவாரியாக ஆர்வத்துடன் கலந்துகொள்வது மட்டுமின்றி, கூட்டங்களில் விஷயங்களை அதிகம் எதிர்பார்க்காமல் ஆர்வத்தைப் பெற்று, வரும் பிப்ரவரி 20-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்திலும் பங்கு கொள்ளவேண்டும். நீங்கள் பெருவாரியாகக் கலந்து கொள்வதை நாங்கள் காண்பதற்கு அல்ல—நாட்டை ஆளுகிற சர்க்கார் அறிந்துகொள்கிற வகையில் நீங்கள் இந்த முயற்சிக்குப் போதரவு காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"வருகிற பிப்ரவரி 20-ந் தேதியன்று நாடெங்கும் பெரியதோர் பொது வேலை நிறுத்தம் நடைபெறவிருக்கிறது. சர்வ கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி இந்த முடிவை மேற்கொண்டிருக்கின்றனர்; அந்த முடிவை தி. மு. கழகப் பொதுக் குழு அங்கீகரித்து ஆதரித்திருக்கிறது.

"பிப்ரவரி 20-ல் நடைபெற வேண்டிய காரியம் தி. மு. கழகத்தின் பொறுப்பில் மட்டும் நடைபெறுவதல்ல; முன்பு, தி. மு. கழகம் மட்டுமே பொறுப்பேற்று பல காரியங்களைச் செய்திருக்கிறது; ஆனால் இப்போது, வேறு பல கட்சிகளுடனும் இணைந்து பெரியதோர் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறது.

"தி. மு. கழகம் மட்டும் ஏதேனும் காரியங்களில் ஈடுபடும் போது தோழர்கள் எத்தனை கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் காரியமாற்றுவார்களோ, அதைவிட அதிகக் கண்ணியமாகக் கட்டுப்பாட்டுடன் செயல்படவேண்டும் என்று தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கூட்டு முயற்சியில் கழகத் தோழர்கள் நடந்துகொள்கிற முறையைப் பார்த்துவிட்டு, அதில் ஈடுபடுகிற இதர கட்சியினர் எல்லாம், 'ஆகா! நாம் இருக்கவேண்டிய எழில் மிக்க இடம் இதுவல்லவா? எதற்காகத்தான் நாம் எல்லாம் பிரிந்திருக்கவேண்டும் இனியும்? ஒன்றுபடுவோம்,'—என்று எண்ணுகிற அந்த ஆனந்த நாளைக் கொண்டு வருவதாக இருக்கவேண்டும்.

"சர்வகட்சிப் போராட்டத்தை நீங்கள் உணருவதற்கு, சர்வகட்சியினரும் கூடியுள்ளது எவ்வளவு மகத்தான அணிவகுப்பு—கூட்டு முயற்சி—எவ்வளவு பெரிய வாய்ப்பு என்பதை நீங்கள் புரிந்துகொண்டாகவேண்டும்.

"இந்த சர்வகட்சி அணிவகுப்பில் இரண்டே இரண்டு கட்சியினர்தான் இடம்பெறவில்லை—ஒன்று, காங்கிரஸ்; அது இந்த அணிவகுப்பில் இடம்பெற முடியாதது—அதனால் இடம்பெறவில்லை; மற்றொன்று, திராவிடர் கழகம்; அது இந்த அணிவகுப்பில் இடம் பெறுவதற்குக் கூறப்படும் காரணம் பொருத்தமானதாக இல்லை. நாம் எல்லாம் மிக்கக் கண்ணியத்துடன் செயல்படுவோமானால் அவர்களும் இடம்பெற முற்படுவார்கள் என நான் நம்புகிறேன்.

"நீங்கள், 'அணிவகுப்பில் இடம் பெற்றிருப்பவர் அவரா—இவரா?' என்று ஆராய்ச்சி செய்வதில் பயனில்லை. சர்வ கட்சியினரும் அவரவர்களுக்கென்றிருக்கும் கொடி பறக்க—வேலைத் திட்டம் அப்படியே நீடிக்க—கொள்கை, கோட்பாடுகள் மாறுபிருக்கத்தான் செய்கின்றனர்; எவரும் எதையும் விட்டுவிட்டு — தமது தனித்தன்மையை இழந்துவிட்டு கூட்டணியில் சேர்ந்துவிடவில்லை; ஆனால், பொதுப் பிரச்னையில் ஒன்றுகூடி வழி காண மட்டுமே கூடியிருக்கிறார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

ரூ. 21,69,00,000 கடன் வழங்கினராம்!

மத்திய சர்க்காரின் நிதி உதவி பெற்று தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தின் கீழ், 1955 நவம்பர் இறுதி வரை பல்வேறு மாநிலங்களில் 34,000-க்கு மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டன; இதற்காக இந்திய சர்க்கார் கடனாகவும், சகாயத் தொகையாகவும் மொத்தம் ரூ. 21,69,00,000 வழங்கினர்.

பூனாவில் தடை உத்தரவு

பூனா நகரில் விதிக்கப்பட்டிருக்கும் தடையுத்தரவை மீறியதற்காக இரு பெண்கள் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், சோஷலிஸ்டு கட்சியினர் பம்பாயை மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது என்ற திட்டத்தை எதிர்த்துக் கண்டன ஊர்வலம் ஒன்று நடத்துவதாக அறிவித்திருந்ததினால் அதை ஒட்டி விதிக்கப்பட்ட தடையுத்தரவைத்தான் தோழர்கள் மீறினர் என்றும் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—2—'56 வியாழன்

நாக்கும்-நடைமுறையும்!

மக்களாட்சி முறைப்படிதான் நாடாண்டு வருவதாகக் காங்கிரஸ் மேலிடமும், அதன் எடுபிடிகளும் கூறிவருகிறார்கள். மக்களாட்சித் தத்துவத்தில்தான் தங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதாகவும் அவர்கள் பறைசாற்றவும் தவறுவது கிடையாது.

மக்களாட்சியின் மகத்துவம்—புனிதம் குறித்துக் காங்கிரஸ் மேலிடத்தின் நாயகர், விண்முட்டப் பேசாத நாள் கிடையாது. மக்களாட்சி முறையில் தங்களுக்குள்ள நம்பிக்கையை உலகத்தவர்கள் ஒப்புக்கொள்வதற்காக, வயதுவந்தவர்கள் அனைவருக்கும் வழங்கியுள்ள வாக்குரிமை பற்றியும், அவ்வாக்குரிமை அடிப்படையில் நடைபெறறப் பொதுத் தேர்தலைக் குறித்தும் அவர்கள் சதா சர்வகாலமும் பீத்திக்கொண்டும் இருக்கிறார்கள்.

மக்களாட்சி முறை, வாக்குரிமை வழங்கப்படுவதிலும், அதைக்கொண்டு தேர்தல் முடிவை நிச்சயிப்பதிலும் மட்டுமே அடங்கிக் கிடப்பதன்று. அது வெறும் அரசியல் கோட்பாடு அல்ல; அது ஒரு புதிய வாழ்க்கை முறையாகும்.

அப்புதிய வாழ்க்கை முறை நாட்டு மக்களின் இருதயங்களில் இடம் பெற்றாக வேண்டும். ஆளவந்தார்களின் இதயங்களிலும் அது நிரந்தரமாகக் குடியேறியாக வேண்டும். அது, தனது இருப்பிடமாக நேரு பண்டிதர் இதயத்தையும் பெற்றாக வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு கொள்கைக்கு ஒருவர் தனது இருதயத்தில் இடம் கொடுத்தால்தான், அவர் மேற்கொள்ளும் செயல் ஒவ்வொன்றிலும், அதனுடைய பிரதிபலிப்பைக் காண முடியும். அப்பொழுதுதான் அவ்வுயர் கருத்தின் நறுமணத்தைப் பிறரால் நுகர்ந்து அனுபவிக்க முடியும்.

ஒருவருடைய உள்ளக்கிடக்கையைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுவதில், ஒரு சிறு செயலுக்கு இருக்கின்ற ஆற்றல் ஆயிரம் சொல்லுக்குக் கூடக் கிடையாது. ஒருவரின் நாக்கும் நடைமுறையும் ஒத்திருந்தால்தான், எந்த ஒரு கோட்பாட்டிற்கும் மதிப்பேறபடும். ஒருவரால் கூறப்படும் கோட்பாடு மட்டும் உயர்வுடையதாயவும் இன்றியமையாத் தேவைப் படுவதாகவும் இருந்தாலும், அதைச் சிறப்பித்துக் கூறுபவரே அதை மேற்கொண்டு ஒழுகத் தவறிவிடும் பொழுது, அக்கோட்பாடும் மதிப்பிழக்கிறது; அதைச் செயலாற்றத் தவறுகிறவரும் கேலிக்கும் கண்டனத்துக்கும் உரியவராகிறார்.

மக்களாட்சியின் அருமை பெருமை குறித்து நயமாகவும் ஆணித்தரமாகவும் போதித்து வருகிற இந்தியப் பிரதமர் நேரு, தன்னைப் பொறுத்த விவகாரத்தில் அக்கோட்பாட்டை எந்த அளவில் மதித்து நடப்பவராக இருக்கிறார் என்பது சிந்திக்கத்தக்கது - ஆராய்ந்து பார்க்கத்தக்கது. அத்தகு ஆராய்ச்சியில் நேரு பண்டிதர் குறைபாடு உடையவராகக் காணப்படுகிறாரா இல்லையா என்பதைப் பார்ப்போம்.

மாகாணங்களைத் திருத்தி அமைப்பது என்பது, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துள்ள காங்கிரஸ் கட்சியினரை மட்டுமே பொறுத்துள்ள ஒரு விஷயமன்று; இந்தியத் துணைக்கண்டத்தின் பொதுப் பிரச்சினையாகும் அது.

மாகாணங்களைத் திருத்தி அமைப்பதினால் ஏற்படுகின்ற சாதக பாதகங்கள், காங்கிரஸ் கட்சியினரை மட்டுமே சேரக்கூடியதன்று; பொது மக்கள் அனைவரையுமே அது பற்றக்கூடியதாகும்.

எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும், எந்தக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தபோதிலும், எந்த மொழியைப் பேசுகிறவர்களாக இருந்தபோதிலும் தன்மையிலும்தகுதியிலும் மிகமிகக் குறைந்தவர்களாகக் காணப்பட்டபோதிலும், அவர்கள் அனைவருக்கும் தொடர்புடைய பொதுப் பிரச்சினையான மாகாணங்களைத் திருத்தி அமைக்கும் விஷயத்தில், காங்கிரஸ் கட்சி மட்டுமே தீர்ப்பளிக்க முன்வந்தது எவ்வகையிலும் நியாயமானதாகாது; அதில் மக்களாட்சி மணம் ஒரு துளி வீசுவதாகவும் இல்லை.

மாகாணங்களைத் திருத்தி அமைக்கும் விஷயம், இந்தியத் துணைக் கண்டத்தின் பொதுப் பிரச்சினையாக இருக்கும்பொழுது, ஆட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரஸ் கட்சியின் சார்பில் இந்தியப் பிரதமர் நேரு மட்டுமே தீர்ப்பளிக்க முன்வராமல், அப்பொறுப்பை மற்ற கட்சிகளுடனும் சேர்ந்து பகிர்ந்துகொள்ள முன்வந்திருக்க வேண்டும். அவ்வாறு சர்வ கட்சியினராலும் கூட்டாக அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பு, பல்வேறு மக்களின் ஆத்திரத்தையும் மூட்டிவிட்ட நேரு தீர்ப்புப் போன்ற ஒரு தீர்ப்பாகவும் இருந்திருக்காது. கூடுமான வரை தீர்ப்பின் இலாப நஷ்டத்தை மக்கள் அனைவராலும் பகிர்ந்து அனுபவிக்கக் கூடிய ஒரு நியாயமானத் தீர்ப்பாகவே இருந்திருக்கும்.

மாகாணங்களைத் திருத்தி அமைப்பது ஒரு பொதுப் பிரச்சினை—அது ஒரு தேசீயப் பிரச்சினை எதுவானாலும், அதைத் தீர்ப்பதற்கு மக்களாட்சிமுறையில் அனுபவ வாயிலாக ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரே வழியாக இருப்பது, ஆளும் கட்சி, மற்ற கட்சிகளுடன் ஒன்றாக இணைந்து பரிகாரம் காணுவதேயாகும். அதை நடைமுறையில் செயலாற்ற இந்தியப் பிரதமர் நேரு முன்வரவில்லை.

தேசீயப் பொதுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் மற்றக் கட்சிகளுடன் இணைந்து கூட்டாக முயற்சிக்கும் இந்த வழியை, இந்தியப் பிரதமர் பின்பற்றத் தவறியதற்கு, அவ்வுயர்வழியை அவர் அறிந்திலர் எனக்கூற முடியாது; அவருடைய அறிவை, அவ்வளவு குறைவாக மதிப்பிட எவருக்கும் துணிவிருக்காது.

அவர் செய்த தவறு, அறியாமையினால் நிகழ்ந்ததன்று. அவர், அத்தவறை வேண்டுமென்றே செய்திருக்கிறார் என்றுதான் கொள்ள வேண்டியதாகிறது.

'இந்தியாவே காங்கிரஸ்', காங்கிரசே நேரு', 'நேருவே இந்தியா' என்று தாம் உள்பட எண்ணும்படி இந்தியத் துணைக் கண்டத்தின் நடப்பு முறை அனைத்தும் இருந்து வருகிறது. அத்தவறான கருத்துக்கு மேலும் உரமூட்டும் வகையில் பிறநாட்டு அரசியல் தலைவர்களின் போக்கும் இருந்து வருகிறது. எனவே, இந்தியப் பிரதமர் நேரு, மாகாணங்களைத் திருத்தி அமைக்கும் ஒரு முக்கிய தேசீய பிரச்சினையிலும், மற்றக் கட்சிகளைப் பொருட்டாக மதித்து நடக்க மறந்து, எதேச்சாதிகாரமாக நடந்துகொள்ளத் துணிந்துவிட்டார். தம்மால் சொல்லலங்காரமாகக் கூறப்பட்டு வந்த மக்களாட்சிக்கும் மரண ஓலை வாசித்துவிட்டார்.

உலகப் புகழால் தலைவீக்கம் கொண்டு 'எனது முடிவே இறுதியான முடிவு - இது மாற்ற முடியாத முடிவு' என எக்காளமிட்ட நேரு, 'இது நிரந்தரமான முடிவல்ல - இது மாற்றக்கூடியமுடிவுதான்' என முகாரி பாடும் நிலை பெற்றிருக்கிறார். மக்களாட்சியை மறந்து நடக்கத் துணிந்த 'மனிதருள் மாணிக்க'த்திற்கு, மக்கள் நல்ல பாடம் கற்பித்துவிட்டார்கள். அவருடைய மக்களாட்சியின் மண் குதிரைத் தன்மையை மக்கள் பொடிப்பொடியாக்கிவிட்டார்கள்.

உலகப் புகழ், இந்தியப் பிரதமர் நேருவிற்கு ஒரு பெரும் போதைப் பொருளாகிவிட்டது. அப்போதைக்கு ஆளாகித் தமது நிலையை மறந்து கிடந்த 'ஆசிய ஜோதி'க்கு, மயக்கந் தெளிய மருந்தூட்டிவிட்டார்கள் மக்கள்.

மக்கள் தந்த மருந்தினால், எதேச்சாதிகாரியான இந்தியப் பிரதமரின் மனமயக்கம் முழுதும் தெளிந்ததாகக் காணோம். எதேச்சாதிகாரப் போக்கிலேயே புதிய நாசத்துக்கு வித்திடுகிறார். சென்னை தமிழ் நாடு சர்வ கட்சியினர் மேற்கொண்டிருக்கும் பொது வேலை நிறுத்தந்தான், அவரைப் பூரணமாக மயக்கம் தெளிவிக்க உதவும் போலும். எனவே, பொது வேலை நிறுத்தம் வெற்றி பெற தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் தம்மாலியன்றதைச் செய்ய முன்வருவராக.

தலைமை நிலையச் செய்தி

27—1—56ல், சென்னையில் நடைபெற்ற தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினை பற்றிய சர்வ கட்சி மாநாட்டிலும், 28—1—56ல் நடைபெற்ற அகில இந்திய ஆட்சி மொழிப் பிரச்சினை பற்றிய மாநாட்டிலும் கலந்துகொண்டுவிட்டு, 29—1—56ல் சிதம்பரத்தில் நடைபெற்றப் பொதுக்குழுக் கூட்டத்திற்குச் சென்ற பொதுச் செயலாளர் 30-1-56 காலை சென்னை வந்து சேர்ந்தார். பொதுக் குழு முடிவுகளை விளக்குவதற்கு என்று 30—1—56ல் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

★

30—1—56ல் பொதுச் செயலாளர் அவர்கள், தோழர் சி. என். ஏ., அவர்களோடும், துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. என். அவர்களோடும் கலந்து உரையாடி, பிப்ரவரி 20ல் பொதுவேலை நிறுத்தத்தைத் தமிழகம் எங்கும் அமைதியாகவும் சிறப்பாகவும் நடத்துவதற்குத் தி. மு. கழகத் தோழர்களை ஊக்குவிக்கும் ஏற்பாடுகள் பற்றி யோசித்தார்.

★

பொதுச்செயலாளர் அவர்கள் சென்னையிலேயே பிப்ரவரி திங்கள் முழுவதும் தங்கியிருந்து, சர்வ கட்சி மாநாட்டின் முடிவுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவார்.

★

பொது வேலை நிறுத்த நாளுக்கு முன்பு தமிழகம் எங்கும் நான்கு நாட்கள் சுற்றுப் பயணத்தைக் காரின் மூலம் மேற்கொண்டு, ஆங்காங்குள்ள கழகத் தோழர்களைக் கண்டு பொது வேலை நிறுத்தத்தைப் பலாத்காரமற்ற அமைதியான முறையில் வெற்றிகரமான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளும்படி அறிவுரைகள் கூறிவரும்படி தோழர் சி. என். ஏ. அவர்கள் பொதுச் செயலாளரால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். தோழர் சி. என். ஏ. அவர்களும் இசைவு தந்துள்ளார்கள். அவர்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

★

சர்வகட்சி மாநாட்டின் பீர்மேடு - தேவிகுளம் பற்றிய முடிவுகளையும், பொதுக் குழு முடிவுகளையும் சென்னைப் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டுவதற்கான முறையில், கழகச் சொற்பொழிவாளர்களைக் கொண்டு சென்னையின் பல பகுதிகளிலும் பல பொதுக் கூட்டங்கள் கூட்டும்படி பொதுச்செயலாளர் சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினரைக் கேட்டுக்கொண்டுள்ளார். சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினரும் இசைந்து பல பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

'தட்சிணப் பிரதேச யோசனையைக் கைவிடுக'

'மொழிவழியில் மாநிலங்களை அமைக்க வேண்டும்'

கூட்டணித் தலைவர் பி. டி. இராசன் அறிக்கை

'இந்தியப் பேரரசினர் உத்தேசித்துள்ள தட்சிணப் பிரதேச மாநில அமைப்பை ஏற்கக் கண்டிப்பாக மறுப்பதுடன், இந்தியப் பேரரசு அதனைக் கைவிடவேண்டும் என்றும், சென்னை மாநில சர்க்கார், அதனை அங்கீகரிக்கக் கூடாது என்றும் கடந்த ஜனவரி 27-ந் தேதி நடைபெற்ற சகல கட்சி மாநாட்டில் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது. மேலும் மாநில எல்லைத் தகராறுகளை மொழி அடிப்படையில் தீர்த்து வைக்கவேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காக, மக்களின் எண்ணங்களைத் தெளிவாக வெளிகாட்டும் பொருட்டு, வரும் பிப்ரவரி 20-ந் தேதியன்று நாடெங்கும் பொது வேலை நிறுத்தம் நடத்துவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பொது வேலை நிறுத்தம் நடத்தப்படவேண்டிய நேரம் குறித்து சீக்கிரமே மக்களுக்கு அறிவிப்புத் தரப்படும்”

என்று, சில கட்சிக் கூட்டணித் தலைவரான திரு. பி. டி. இராசன் அவர்கள் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

பொது வேலைநிறுத்தத்திற்கு டாக்டர் வரதராசுலு பேராதரவு

'பலாத்காரம் கூடாது' என்கிறார்

பண்டிதருக்கும்–காமராசருக்கும் வழக்கமான பாராட்டு

“பொது வேலை நிறுத்தங்கள், மக்களின் உணர்வுகளை எடுத்துக் காட்டுவன—விளக்குவன என்பது உண்மைதான்; ஆகவே, நான், 'அத்தகு ஆர்ப்பாட்டங்கள் கூடாது' என்று தடை கூறவில்லை; ஆனால், மாநிலங்களின் புது அமைப்பு குறித்து முடிவெடுப்பதற்கு இன்னும் காலம் வரவில்லை.

“நான் கூறுகிற யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லையானல், ஆர்ப்பாட்டங்களை நடத்துபவர்கள், பலாத்காரம் எந்த ரூபத்திலும் தலைதூக்காதவாறு கவனமுடன் பார்த்துக்கொள்ள வேண்டுவது அவசியமாகும்”

என்று டாக்டர் பி. வரதராசுலு (நாயுடு) அவர்கள் அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

'இந்தியாவின் நலன்கள், தமிழ் நாட்டின் நலன்கள் ஆகியவை முறையே பண்டித நேரு, காமராசர் ஆகியோரால் பாதுகாக்கப்படும் என்று நான் திடமாக நம்புகிறேன்' என்றும், வழக்கமான முறையில் டாக்டர் நாயுடு பாராட்டிவிட்டு, 'காமராசர் தன் நாட்டு மக்களைக் காட்டிக்கொடுக்க மாட்டார்' என்றும் கூறியிருக்கிறார்.

Bleed through.

'கட்டுப்பாட்டை மீறி மாணவர்கள் என்ன செய்தார்கள்?'

மந்திரி சுப்பிரமணியத்திற்குச் சூடு!

"நமது அபிமான கல்வி மந்திரி திரு. சி. சு. மணியம், இப்போது ஒரு அருமையான உண்மையை வெளியிட்டிருக்கிறார்.

"'மாணவர்களுக்குப் பீர்மேட்டிற்கும் — பீளமேட்டிற்கும்கூட வித்தியாசம் தெரியாது; விஷயம் தெரியாத அவர்களை அரசியல் கிளர்ச்சியில் தூண்டிவிடக்கூடாது. மாணவர்களிடையே கட்டுப்பாடும்; அமைதியான சூழ்நிலையும் நிலவவர வேண்டும்'—இது அவசியம் என்பதை யாரும் மறுக்கவில்லை ஆனால், இந்த நிலைக்கு முதன் முதலில் தூபம் போட்டு வழி காட்டியவர்கள் யார்? அந்தப் பெருக்கும் புகழுக்கும் உரியவர்கள் காங்கிரஸ் அன்பர்கள்.

"தமிழ் நாட்டில், சமீபத்தில் நடைபெற்ற கிளர்ச்சியில் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் மீறி மாணவர்கள் என்ன செய்து விட்டார்கள்?

"கொளுத்தும் வேலையும் கொலையும் வடக்கேதான் நடைபெற்றது இங்குள்ள மாணவர்கள் அத்தகைய வேண்டாத வேலையில் இறங்கவும் இல்லை; அது பற்றிச் சிந்திக்கக்கூட இல்லை என்று சொல்லலாம்.

"காந்தி காட்டிய சாந்திவழியைப் பின்பற்றி ஒரு சில இடங்களில் மறியல் செய்தார்கள். மற்ற இடங்களில் ஒழுங்கான முறையில்—அதுவும் ரோடு விதிகளைப் பின்பற்றி ஒரு நாள் ஊர்வலம் நடத்தினார்கள். இந்த ஒழுங்கு முறைக்காக மாணவர்களைப் பாராட்ட வேண்டும். தெற்கிலே சகிப்புத்தன்மை எவ்வளவு மகத்தானது என்பதை அவர்கள் மட்டுமல்ல—மற்ற எல்லோருமே நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

"மந்திரி சொல்வதைப் பார்த்தால், மாணவர்கள் இனிமேல் இத்தகை அரசியல் துறையில்கூட இறங்கக்கூடாது. செத்தவனுக்கு ஒரு நிமிட நேரம் மௌனப் பிரார்த்தனை செய்வதுபோல, கோரிக்கைக்கும், எழுச்சியுற்ற ஆன்மா சாந்தி அடையும்படி ஒரு நிமிட நேரம் மௌனப் பிரார்த்தனை செய்துவிட்டுப் பிறகு உட்கார்ந்து கொள்ளலாம். இதுதான் மாணவர்களின் மதியூக வழியாக இருக்க வேண்டும்.

"மாணவர்களுக்கு விஷயம் தெரியவில்லை என்றால், அதற்குக் காரணம், இந்தக் காலத்தில் விஷயம் தெரிந்தவர்களை அவ்வளவு முக்கியமாகக் கருதாதது தான். முன்பு பள்ளியிலிருந்து அரசியல் கிளர்ச்சிக்காக அரைகுறைப் படிப்பிலிருந்து வெளியேறியவர்கள், அதுவும் இல்லாதவர்கள் ஏதோ சூழ்நிலை வினைப் பயன் காரணமாகத் 'தியாகி' 'தேசிய வீரன்' என்றெல்லாம் பட்டம் பெற்று பதவிக்கு வந்துவிட்டார்கள். இந்தச் சூழ்நிலை வினையின் 'அதிர்ஷ்டப் பிரைஸ்' நமக்கும் அடிக்காதா என்று மாணவர்கள் எங்கினால் அதற்கு யார் பொறுப்பு?

"மாணவர்களுக்கு விஷயம் தெரியாதது இருக்கட்டும் சார்; விஷயம் தெரிந்த மந்திரிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்......?" என்று என் ஆபீஸ் பையன் வேறு அதிகப் பிரசங்கித்தனமான கேள்வியில் இறங்குகிறான்.

"விஷயம் தெரிவதும், தெரியாததும் விஷயத்தைப் பொறுத்ததல்ல; அது அவரவர் சௌகரியத்தைப் பொறுத்தது. தனது சௌகரியத்திற்கு ஏற்றபடி யார் பேசினாலும் அவர்கள் விஷயம் தெரிந்தவர்களாகக் காட்சியளிக்கிறார்கள். வேறுவிதமாகப் பேசிவிட்டாலோ விஷயம் தெரியாமல் போய்விடுகிறது"

31—1—56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'யூ ஆர்.' என்பவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

****

தலைமை நிலையச் செய்தி

நன்றி அறிவிப்பு

29—1—56 ஞாயிறன்று சிதம்பரத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, தக்க பல உருவான கருத்துக்களைக் கூறிப் பொதுக் குழுக் கூட்டத்தை மிக்க சீரும் சிறப்பும் பொருந்த நடத்தித் தந்தமைக்காகவும், விடுபட்ட தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டிலும், இந்தியத் துணைக் கண்டத்தின், ஆட்சி மொழியும், பொது மொழியும், மாநிலங்களின் தொடர்பு மொழியும் ஆங்கிலமே தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தக் கூட்டப்பட்ட மாநாட்டிலும் நான் கலந்துகொண்டதை ஆதரித்தும், அவை பற்றி மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பொறுத்து எனக்கு முழு அதிகாரம் அளித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றித் தந்தமைக்காகவும் நான் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவர்க்கும் என் நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வகட்சி மாநாட்டில் தீர்மானித்தபடி பிப்ரவரி 20-ஆம் நாளில் பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளும் நடவடிக்கையை முழு மனதோடு ஆதரித்தது மட்டுமல்லாமல், பொது வேலை நிறுத்தத்தைப் பலாத்காரத்துக்கு இடமில்லாதவகையில், அமைதியான முறையில், நேரிய வழியில் சர்வகட்சித் தோழர்களின் ஒத்துழைப்போடு செய்து காட்டத் தாம் முயற்சிகளை மேற்கொள்ளப்போவதாக வாக்களித்ததற்காகவும், எல்லாப் பொதுக் குழு உறுப்பினர்க்கும் என் பாராட்டுதலையும், நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
பொதுச் செயலாளர்

'அறிவகம்'
சென்னை-13
31-1-'56

தி. மு. க. மாநில மாநாட்டு

நிதி அளிப்புக் கூட்டம்

5—2—56 மாலை 5 மணிக்கு
சென்னை ஐகோர்ட்கடற்கரையில்
தோழர் கே. ஏ. மதியழகன்
தலைமையில் நடைபெறும்
அண்ணா
காஞ்சி-மணிமொழியார்
மற்றும் பலர் பேசுவர்
—11-வது வட்ட தி. மு. கழகம்.

இலட்சம் மக்களிடை அண்ணா

சென்னைப் பொதுக்கூட்டத்தில் தெளிவுரை

சென்னை, பிப். 1—

தி. மு. கழகப் பொதுக் குழு முடிவுகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வதற்கு, சென்னை மாவட்ட தி. மு. கழகத்தார் ஏற்பாடு செய்துள்ள கூட்டத் தொடரில் இரண்டாவதாக, சென்னை-வண்ணையம்பதியில் 4-வது வட்ட தி. மு. கழகச் சார்பாக ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் கல்லறை மைதானத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். எண்ணற்ற தாய்மார்களும் கூட்டத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்திற்கு தோழர் கே எஸ் அருணாசலம் அவர்கள் தலைமை தாங்கி, கூட்ட நோக்கத்தை விளக்கினார்.

துவக்கத்தில் தோழர் சண்முகம் இயக்கப் பாடல் பாடினார்.

அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் தேவிகுளம்-பீர்மேடு பிரச்சினை குறித்து சிறிது நேரம் பேசினார்.

அடுத்து, தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், பிரச்சினையை விளக்கி நிலைமைகளைத் தெளிவுபடுத்தினார்.

அடுத்து தோழியர் பி. எஸ். செல்வா அவர்கள் இயக்கப் பாடல் சில பாடினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் நீண்டநேரம் கழக முடிவுகள் குறித்தும், பிப்ரவரி 20-ந் தேதியன்று நடைபெற வேண்டிய பொதுவேலை நிறுத்தம் குறித்தும், அதனை நடத்த அமைந்துள்ள சகல கட்சிக் கூட்டணி குறித்தும் விளக்கி அரியதோர் சிறப்புரை நல்கினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந.-தி.)

சுயநலம் நாடும் காங்கிரஸ் எம். எல். ஏ.!

"இப்போது கொள்கையைவிடத் தனிப்பட்டவர்களின் வசதிகள் தான் முக்கியமானது.

"சித்தூர் தமிழ்ப் பகுதிகள் சென்னையுடன் சேரவேண்டும்; பீர்மேடு—தேவிகுளம் சென்னையுடன் இணையவேண்டும் என்ற அன்பர் நிராமணியாருடன் தோளோடு தோள் நின்ற ஒரு காங்கிரஸ் எம். எல். ஏ., இன்று கோவை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களிலுள்ள காங்கிரஸ் எம். எல். ஏ.-க்களிடையே 'தட்சிணப் பிரதேச' அமைப்புக்கு ஆதரவு தேடி வருகிறாராம்.

"இந்நிலை காரணம் கொள்கைக்கு முன்னே தனிப்பட்ட வசதி குறுக்கிடுகிறது. 'தட்சிணப் பிரதேசம்' ஏற்பட்டால், எப்படியாவது பரம்பிக்குளத் திட்டம் வந்துவிடும்; அப்போது, தனக்குச் சொந்தமான காடுமேடெல்லாம் கழனியாகிவிடும்—என்ற எண்ணம் வெளிப்படையாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக இருக்கும்.

"தட்சிணப் பிரதேசம் அமைந்தால் மேற்கொண்டு அணைக்கட்டுகள், மின்சார உற்பத்தி எல்லாம் ஏற்படுமென்று இப்போது வாதிக்கிறார்களாம். இந்த அபிவிருத்தி மனப்பான்மை முன்பு ஏன் தோன்றவில்லை?

"கிள்ளி விடுபவர்களும் இவர்கள்தான்; பிறகு தொட்டிலை ஆட்டி, 'ஆராரோ' பாடுபவர்களும் இவர்கள்தான்!

இவ்வாறு, 'யூ. ஆர்.' என்பவர், 31—1—56 'நவ இந்தியா' இதழில், 'ஊர்வம்பு' என்ற பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

★

திருக்கோவிலூர்

20—1—56-ல், கழக உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் இலக்கிய மன்றச் சார்பில், தோழர் ப. குழந்தைவேலு தலைமையில் விழா நடைபெற்றது தோழர்கள் க. அன்பழகன் இரா. இளம்வழுதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வைத்திலிங்கபுரம்

15—1—56ல், வைத்திலிங்கபுரம் சமுதாய அபிவிருத்தித் திட்ட ஒத்துழைப்புடன், பொது மக்களால் பல்வேறு பந்தய விளையாட்டுக்களுடனும், பொதுக் கூட்டத்துடனும் சிறப்பாக விழா கொண்டாடப்பட்டது. விழாக் கூட்டத்திற்கு திரு. டாக்டர் சாமுவேல் தலைமை தாங்கினர். திருவாளர்கள் முத்துக்குமாரசாமி, ஏ. ஆர். பொன்னையா, மார்க்கண்டேயன், குருசாமி ஆகியோர் பொங்கல் விழா குறித்தும், தமிழகமும் தமிழரும் தாழ்வுற்றுக்கிடப்பதற்கான காரணம் குறித்தும் சொற்பொழிவாற்றினர். அன்று இரவு ரெட்டியாபட்டி ஆதாரப் பள்ளி மாணவர்களால் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

விளாம்பட்டி

16—1—56 காலை 6 மணிக்கு விளாம்பட்டி திகழ்கழகத்தில், விழாவையொட்டி சிறுவர்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது. காலை 8 மணிக்கு பாண்டியன் படிப்பக ஆண்டு விழா தோழர் எஸ். வீ. சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இ. மா. காளியப்பன், வ. அருணாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாலை 6 மணிக்கு தோழர் பி. சுப்பையா தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். நவிக்கன், ஆ. திராவிடமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

****

திராவிட முன்னேற்றக் கழக 2-வது

மாநில மாநாடு

திருச்சியில் மே 17, 18, 19, 20

நாட்களில் நடைபெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

****

அண்ணாவின் விளக்கவுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த மகத்தான கூட்டணி கண்டது, நமது பொதுச் செயலாளர் அவர்கள் பதவி ஏற்ற ஓராண்டுக் காலத்திற்குள்ளாகத் தி. மு.கழகத்திற்குப் பெற்றுத் தந்துள்ள மகத்தான இராஜதந்திர வெற்றியாகும்; ஏனெனில், இதுநாள் வரை, தி. மு. கழகத்தின்மீது ஒரு பழி சொல்லப்பட்டு வந்தது — 'இவர்கள் தண்ணீரின் பேரில் ஊற்றப்பட்ட எண்ணெய் போன்றவர்கள்; எதையும் கலக்கவும் மாட்டார்கள்; எதையும் கலக்கவும்விடமாட்டார்கள்; எதையும் செய்யமாட்டார்கள்— எதையும் செய்யவிட மாட்டார்கள்'—என்று, தி. மு. கழகத்தின் மீதிருந்த குற்றச்சாட்டை இந்தக் கூட்டணி கண்டதின் மூலம் நமது பொதுச்செயலாளர் அவர்கள் நீக்கியிருக்கிறார்கள்.

"கட்சிகளுக்கிடையே முன்பு பகை இருந்திருக்கலாம்; பின்பு பகை தோன்றக்கூடும்; ஆனாலும், இடைக்காலத்தில் ஒன்றுபட்டிருக்கிறார்கள்.

"சர்வ கட்சியினரும் கூடியிருந்த மாநாட்டினைக் காணும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கவில்லை; எனக்கு அந்த வாய்ப்புத் தரப்பட்டிருந்தது. அந்தக் காட்சியை உங்கள் மனக்கண் முன்னால் கொண்டுவருகிறேன் — தெரிந்துகொள்ளுங்கள் எத்தனை அழகான எழிலோவியம் அது என்பதை!

"ஒரு பக்கத்திலே ம. பொ. சிவஞானம் அவர்கள் — நண்பர்களே எனது வாசகங்களைக் கூர்ந்து கவனியுங்கள்—நான் சொல்லுவது தோழர் ம. பொ. சிவஞானம் அவர்களை; ம. பொ. சிவஞான கிராமணியாரை அல்ல; சிவஞான கிராமணியார் தமிழரசுக் கழகத் தலைவர்; இடைக் காலத்தில் அவருக்கும் நமக்கும் பகை இருந்தது உண்டு; அதற்கு முன்பு அவரும் நாமும் ஒன்றாக இருந்து பணியாற்ற நாட்களை எண்ணிப் பாருங்கள். தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தமிழ் நாட்டினிடத்தில் நல்ல பாசமும், நம்மிடத்தில் அன்பும் கொண்டவர் என்பதை எவரும் மறக்க முடியாது.

"மடாலயச் சொத்தை மக்களுக்கு ஆக்கவேண்டும் — என்ற கோரிய காலத்தில் ஒன்றாகப் பணியாற்றினோம்; இனும் மசோதா கொண்டுவரப்பட வேண்டுமென்பதற்காக ஒன்றாகப் பணி புரிந்தோம்; நானும், அவரும் ஒன்றாகத் திருச்சி வானொலி நிலையத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம் அந்தஅளவுக்கு அவருக்கும் நமக்குமிடையில் நல்ல தொடர்பிருந்தது; ஆனால், இடைக்காலத்தில் யாரோ சில பாவிகள்—பழிகாரர்கள் அந்தத் தொடர்பை அற்றுப்போகச் செய்துவிட்டனர்; இப்போது மீண்டும் ஒன்று சேர்ந்திருக்கிறோம். ஒன்று சேர்த்திருப்பது, தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள்; அவை வாழட்டும். இப்போது ஏற்பட்டிருக்கிற தொடர்பு, 'ஆண்டவன் அருளாலே' நீடித்து தமிழ் நாட்டிற்கு நலன் பயக்க வேண்டும்—என அவர்விரும்புகிறார்; நாமும ஆசைப்படுகிறோம்; நீங்களும் வாழ்த்துங்கள்.

"கூட்டணியில் மற்றொரு பக்கத்தில் நமது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களப ஜீவானந்தமும் மணலி கந்தசாமி அவர்களும்; மற்றொரு பக்கத்தில் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் அந்தோனிப்பிள்ளை — சுமார் 14 ஆயிரம் தொழிலாளர்களின் தலைவர்—அவர்கள் அனைவரின் வாழ்வையும் தாழ்வையும் தம் கையில் வைத்திருப்பவர்; அவருக்குத் துணையாக ஏ. சுப்பிரமணியம்; மற்றோர் பக்கத்தில் பிரஜா–சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் சின்னதுரை; மற்றும் நல்லசிவம்: வேறோர்புறத்தில் திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவர் சுயம்பிரகாசம்; இன்னோர் பக்கத்தில் நீதிக் கட்சித் தலைவர் பி. டி இராசன்; மற்றும், நடிகர் சார்பில் தோழர் டி கே. சண்முகம், மற்றும் வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி, இணைப்புக் குழு இவை போன்ற ஸ்தாபனங்களின் தலைவர்கள்.

"இப்படி, கோவிலில் உள்ள 'நவக்கிரகங்கள்' எல்லாம் ஒரு நாள் திடீரென வேறு வேறு பக்கம் திரும்பிக் கொண்டிருந்த நிலையிலிருந்து திரும்பி ஒரே முகமாக நிற்பதுபோல, பல கட்சியினரும் அன்று ஒன்றாகக் கூடினர்; அணியாகத் திரண்டனர்; திட்டம் வகுத்தனர். அந்தக் காட்சி எழில் மிக்கதுதானே! இந்தக் காரியத்தில் தமிழர்களை ஒன்றுபடச் செய்தவர்கள்—கூட்டணி அமைய வழி அமைத்தவர்கள் தமிழர்களுக்கு மிக மிக நன்மை செய்திருக்கிறார்கள்; நல்ல காரியம் செய்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் பல்வேறு காரியங்களைச் சாதிக்கவும் இந்த அமைப்பு நீடிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

"தமிழையும், தமிழரையும் பழித்ததாகச் செய்தி கேட்ட சேரன் செங்குட்டுவன், 'யார் அந்தக் கனகனும், விசயனும்; தமிழரைப் பழித்தத் தருக்கரைப் படை எடுத்துப் பகை முடிப்பேன்,' என்று சூளுரைத்தான். அப்போது அவனருகே இருந்த சிலர், 'மன்னா! கனக விசயன் பழித்தது சேரனை அல்ல; தங்களை அல்ல; யாரோ தமிழர்களை! அதற்காகத் தாங்கள் ஏன் கொதித்தெழ வேண்டும்?' என்று கூறினராம்; உடனே சேரன் செங்குட்டுவன், 'பேதைகாள்! என்னைப் பழித்தால் என்ன? தமிழைப் பழித்தால் என்ன? தமிழ் நாட்டு மண்ணையும், மரத்தையும் பழித்தாலும் என்னைப் பழித்தது போலாகும் என்பதை நீர் அறியாதது ஏனோ? தமிழர்கள் அனைவரும் உடன்பிறந்தார்; ஒரு குடிப்பிறந்தார்; தமிழ்க் குருதி பெற்றோர்; தமிழ்க் குலத்தோர். தமிழ்க் குலம், தமிழ் இனம், தமிழ் மொழி சார்ந்தவர், ஒரு வழி நடப்பவர் என்பதை நீர் அறியாமல் போனது என்னே?' என்று கூறி, பொதுவாகத் தமிழரைப் பழித்த கனகனையும் விசயனையும் பகை முடித்த அந்த நாளைய சேரன் செங்குட்டுவன்போல், இந்த நாளில் நமது பொதுச்செயலாளர், தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கிற பேராபத்தை முறியடிக்க இதர கட்சியினரையும் அணைத்துக் கொண்டு கூட்டு முன்னணி அமைத்திருக்கிறார்.

"இப்போது தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள கேட்டினைத் தவிர்க்க யார் யார் தமிழரோ— அவர் கொடி எதுவானாலும், குடி தமிழானால் — பரம்பரை தமிழ் பரம்பரையானால்-குருதி, தமிழ்க் குருதியானால் ஒன்று சேரத்தான வேண்டும்.

"நான் விரும்பிக் கேட்டுக் கொள்ளுவேன—மக்களில் எவரும், கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ள எந்தக் கட்சித் தலைவரின் அந்தரங்க சுத்தியையும் தயவு செய்து சந்தேகிக்கவேண்டாம்; நான் எப்போதுமே சந்தேகப் பேர்வழி என்று கூறுவார்கள்; நான் கூறுகிறேன—எவரது உள்ளத் தூய்மையிலும் மக்களுக்குச் சந்தேகம் வேண்டாமென்று!

"அன்று கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரிடத்திலும் தமிழ் ஆர்வம் மிகுந்திருந்தது— 'இத்தனை நாள் வேறாக இருந்தோம்; இப்போதாயினும் ஒன்றாக இணைந்தோமே; அதற்கான வாய்ப்புக் கிடைத்ததே'—என்று அனைவரும் மகிழ்ந்தனர். ஒருவரை ஒருவர்—ஒற்றுமைப்பட வாய்ப்புக் கிடைத்ததற்காக வாத்சல்யத்துடன் நோக்கிக்கொண்டனர்; ஒருவரிடத்திலும் கெட்ட எண்ணம், சூதான எண்ணம் இருக்கவில்லை; எனவே, கூட்டணியின் முக்கியத்துவத்தை —சிறப்பை எண்ணிப் பாருங்கள்.

"தமிழ் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நிலையை எண்ணினால், தமிழருடைய மானத்தைக் காக்க— வாழ்வை வளப்படுத்த—எதிர்காலத்தைச் செம்மைப்படுத்த எவ்வளவு பெரிய கூட்டு முயற்சி தேவை என்பது தெரியவரும்.

"தமிழ் நாட்டை விடுத்து, இந்தியத் துணைக் கண்டத்தின் வடக்குப் பகுதியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

"ஓடுகின்ற இரயில் உருளுகின்றது; பாடுகின்ற ரேடியோ நின்றுவிட்டது; பரிபாலனம் செய்யும் மந்திரிகள் பதட்டமுடன் பேசுகின்றனர்.

"முகலாய சாம்ராஜ்பத்தை வேட்டு வைப்பதற்காக, ஏர் பிடித்தவன் கையில் எல்லாம் வாள் கொடுத்து, குகைகளில் பாசறை அமைத்து, காடுகளில் கூடாரங்கள் கண்டு, மகத்தான போராட்டம் நடத்தி மராட்டிய சாம்ராஜ்யம் அமைத்த மாவீரன் சிவாஜி பிறந்த மராட்டிய மண்டலத்திற்கு மமதை நிறைந்த செங்கோட்டை ஆட்சியினரால் — மார்வாடி ஆட்சியாளரால், குலைநடுங்கிக் கிடக்கும் குஜராத்தி ஆட்சியாளரால் இழைக்கப்பட்ட அநீதி கண்டு, மராட்டியர் கொதித்தெழுந்திருக்கின்றனர்; தங்கள் எதிர்காலத்தைக் கருவறுக்கத் திட்டமிடும் ஆட்சியாளரை எதிர்த்துப் போரிடுகின்றனர்.

"ஓரிடத்தில் சிறைச்சாலை தூளாக்கப்பட்டிருக்கிறது; கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்; நான் படித்தவரை வரலாற்றில் இரண்டு முறைகள்தான் சிறைச்சாலைகள் உடைத்தெறியப்பட்டிருக்கின்றன—பிரான்ஸ் நாட்டில் பாஸ்டிலி; கோடுமைக்கூடாரம்; அங்கே வாலிபனாக நுழைந்தவன் வயோதிகனாகத் திரும்புவான்; வயோதிகனாகச் சென்றவன் பிணம்தான் வெளியில் அனுப்பப்படும் — கழுகுக்கு இரையாக! ரஷ்யாவில் புரட்சியின்போது சிறைக்கூடம் ஒன்று தாக்கப்பட்டதுண்டு. ஆனால், இப்போது நாம் வாழும் நாட்களில்—நாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சிறைச்சாலை தகர்த்தெறியப்பட்டிருக்கிறது. சிறையொன்றும் பெரியதல்ல; மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சியும் பிரம்மாண்டமானதல்ல; ஏராளமான மக்களும் கூடிவிடவில்லை; ஆனாலும், சிறை தாக்கப்பட்டு, கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

'மற்றோரிடத்தில், 'முதன் மந்திரி எங்கே? மக்களை வாழவைக்கத் தெரியாத அந்த மண்டூகம் எங்கே?'— என்று மக்கள் தேடினார்கள்; வீட்டு வாயிலில் கூடினார்கள்; மந்திரியின் மனைவியார் வெளியே வந்தார்கள்; வாசலில் பெருங் கூட்டத்தைக் கண்டு, 'என்னவேண்டும்' என்று கேட்டார்கள்; எதற்காக இந்தக் கூட்டம் என்று வினவினார்கள்; 'இதோ பாருங்கள் அம்மா, இந்த மனிதரின் மண்டையிலிருந்து இரத்தம் ஒழுகுவதை; அதோ பாருங்கள் அவரது கரம் அறுந்து விழுந்துவிட்டதை; உங்கள் கணவரின் ஆட்சியில் தானம்மா போலீசாரின் இந்தக் கொடுமை,'—என்று சதறுகிறார்கள். விஷயத்தைக் கேட்ட மந்திரியின் மனைவியார், கையை நொடித்து, கண்ணைக் கசக்கி 'இது அக்கிரமமான காரியம் தான்; அவர் வரட்டும், கேட்கிறேன், என்று மனைவி என்னும் உரிமையுடன் கூறியிருக்கிறார்.

"மற்றோர் இடத்தில் அதிகாரி ஒருவரை மடக்கி கையெழுத்துக் கேட்டிருக்கிறார்கள்—தாங்கள் எழுதி வைத்திருந்த காகிதத்தில், மக்கள்! மக்கள் என்றால் முன்பு அதிகாரி வந்தால் வழிவிடுவர்; வணங்கித் தொழுவர்; அந்த அதிகாரி உத்திரவிட்டால் உயிர் போகும்— உடமை போகும் என்பதையும் மக்கள் அறிவர்; என்றாலும், அந்த அதிகாரி காரில் வந்தபோது ஒரு பெருங்கூட்டத்தினர் வழி மறித்து, அதிகாரியிடமிருந்து கையெழுத்து வாங்கிக்கொண்டு அனுப்பிவைத்திருக்கின்றனர் மக்களுக்கும் தெரியும் — 'அந்த அதிகாரி கையெழுத்துப் போட்டால் போதுமானதல்ல,' என்று! அதேபோல, அதிகாரிக்கும் தெரியும்—'நாம் கையெழுத்துப் போட்டால் மக்கள் கோரும் காரியம் நடக்கப் போதுமானதல்ல,' என்பது! என்றாலும், மக்களுக்கு, யாரையாவது எதையாவது கேட்க வேண்டும் என்றிருந்தது; யாரையாவது எதற்காவது இணங்கச் செய்யவேண்டும் என்று இருந்தது.

"பம்பாயில் கதர் அணிந்தவர் வீதிகளில் நடமாட முடியவில்லை; தொப்பி போட்டவன் பட்டபாடு ஆபத்து; காந்தியார் படங்கள் பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட வேண்டியிருந்தன— என்று கூறப்படுகிறது. பண்டிதரின் படத்திற்குக் கூட பேராபத்தாம்! பரிதாபத்திற்குரிய சம்பவம்தான்!

"இன்னும் இதர மாநில மந்திரிகள் எல்லாம் மாநில அமைப்பு குறித்து ராஜதந்திர காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

[அண்ணா அவர்களது சொற்பொழிவு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.]

* * *

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேவிகுளம், பீர்மேடு பற்றி

தி. மு. கழக விளக்கம்

★

சென்னை — தியாகராயநகரில்

(பஸ் ஸ்டாண்ட் மைதானம்)

3—2—56 வெள்ளி மாலை 5-30 மணிக்கு

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

* * *

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

பிப். 4 திருச்சி
5 ஆலங்குர்
10 திமிரி
12 கோகலே மண்டபம்
சிறப்புச் சொற்பொழிவு
15 திருச்செங்கோடு
16 கள்ளக்குறிச்சி
17 திருக்கடையூர்

* * *

கழகக் கூட்டம்

★

சேத்தூர்

தி. மு. கழகத் துவக்க விழா

மாரியம்மன் கோவில் திடலில்

4—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:

அ. சவுந்திரசாமி

பேசுவோர்:

என். வி. நடராசன்

என். கிட்டப்பா

* * *

திராவிடர் திருநாள்

திருவத்திபுரம்

பெரியார் திடலில்

3—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: போ. கா. இராமசாமி

பேசுவோர்:

காஞ்சி-கல்யாணசுந்தரன்

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.

* * *

சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கட்கு

4—2—56 இரவு 9 மணிக்கு சேலம் 13-வது வட்டம் (கல்லாங்குத்து கிளை) கிளைக் கழகப் பணிமனையில், உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். பிப். 20ல் பொதுவேலை நிறுத்தப் பிரச்சினை குறித்து முடிவு செய்யப்படும்.

* * *

உறையூர் சங்கரன் படிப்பக 2-வது ஆண்டு விழா

4—2—56சனி மாலை 6 மணிக்கு உறையூர் மேட்டுத் தெருத் திடலில் உறையூர் சங்கரன் படிப்பகத்தின் 2-வது ஆண்டு விழா—பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். நெடுமாறன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

பெரும்பள்ளியிறுதி கல்லூரி வகுப்புத் தமிழ்த் தேர்வுகள்

சென்னை மாணவர் மன்றச் சார்பில் பெரும்பள்ளி இறுதி, கல்லூரி வகுப்புகளுக்கு நடைபெறும் தமிழ்த் தேர்வுகள், 4-2-56-ல் சென்னை மாநிலமெங்கும் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளில் நிகழும் என்று அறிவிக்கப்படுகிறது.

* * *

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ